# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

***************

**முறையீட்டு மனு எண்: 2/2017/பே–2**
**ஆணை எண். 104 /நாள்: 13 04–2018**

**திரு அ. தமிழ்வாணன்,**
**த/பெ திரு அர்ச்சுனன்,**
**103, டாக்டர் அம்பேத்கர் தெரு,**
**வளவனூர்,**
**விழுப்புரம் மாவட்டம்.** **–– முறையீட்டு மனுதார்.**

**செயல் அலுவலர் மற்றும் பலர்,**
**வளவனூர் பேரூராட்சி,**
**விழுப்புரம் மாவட்டம்.** **–– எதிர் மனுதார்கள்.**

**ஆணை**

திரு அ. தமிழ்வாணன், 103, டாக்டர் அம்பேத்கர் தெரு, வளவனூர், விழுப்புரம் மாவட்டம், அவர்களின் 03.01.2017ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2017ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 02/2017 என பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சியில் 04.02.2016 அன்று தாயாரம்மாள் வாய்க்கால் மீது கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளது குறித்து தனது புகாரினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1. வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர், 03.02.2016 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மேற்படி கடைகளுக்கான ஏலத்திற்கான பிணைவைப்புத் தொகை பெறப்படும் என அறிவித்து அதற்கு முன்னரே தனக்கு

வேண்டியவர்களுக்கும், தனக்கு யார் அதிகம் பணம் தருகிறார்களோ அவர்களுக்கும் கடைகளை ஒதுக்கீடு செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

2. தான் 03.02.2016ல் ஏலம் கேட்க வரைவோலையுடன் சென்றதாகவும், ஆனால் 1 முதல் 33 கடை வரை ஏலம் கிடையாது எனவும் 34 முதல் 39 எண்ணிட்ட கடைகள் மட்டுமே ஏலம் விடப்படும் என கூறிவிட்டதாக தெரிவித்துள்ளார். இதனால் 1 முதல் 33 கடைகளுக்கு யாரும் ஏலம் கேட்க முடியாமல் செயல் அலுவலர், பேரூராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர் அவர்களின் உதவியுடன் பணம் செலுத்த வரும் நபர்களை பணம் செலுத்த விடாமல் செய்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

3. 04.02.2016ல் மேற்படி ஏலத்தினை தலைமை ஏற்று நடத்த வந்த கோட்டகுப்பம் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஆகியோரிடம் சில லட்சங்கள் தொகையினை கொடுத்து மேற்படி முறைகேட்டிற்கு ஆதரவாக செயல்பட வைத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

4. மேற்படி பேரூராட்சி நிர்வாகத்தினர் ஏற்கனவே 33 கடைகளுக்கு பணம் பெற்றுக் கொண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தான் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மூலம் பெற்று அதன் விவரத்தினையும் இணைத்து சமர்ப்பித்துள்தாக தெரிவித்துள்ளார்.

எனவே பொது ஏலம் என தெரிவித்து விட்டு 1 முதல் 33 கடைகளை, பணம் தருபவர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி ஏலத்தில் முறைகேட்டில் ஈடுபட்டுள்ள அனைவர் மீதும் நடவடிக்கை மேற்கொண்டு தாயாரம்மாள் வாய்க்கால் மீது கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மறு ஏலம் வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 06.01.2017ம் நாளிட்ட அறிப்பாணை மூலம் மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட இதே பொருள் சம்பந்தமாக திரு கா. சாரதி த/பெ திரு காசிராஜன், டாக்டர் அம்பேத்கர் தெரு, வளவனூர் அவர்களும் தனது 20.01.2017ம் நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2017ல் விசாரணை கோரி சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.03.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுதாரர்கள் திரு அ. தமிழ்வாணன் மற்றும் திரு கா. சாரதி மற்றும் சாட்சி திரு வி.திருநாவுக்கரசு, ஆகியோரை தங்கள் முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 20.04.2017 அன்று நேரில் ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது.

வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 32/2017/அ.1/நாள் 22.02.2017ன் மூலம் தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சியில் கிழக்கு மற்றும் மேற்கு பாண்டி சாலைகளின் தெற்கு புறத்தில் தயாராம்மாள் வாய்க்காலின் ஓரத்தில் போக்குவரத்திற்கு

இடையூறாக இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றியதைத் தொடர்ந்து 2012-13ம் ஆண்டில்
ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்படி வாய்க்காலை சீரமைக்க சென்னை
பேரூராட்சிகளின் இயக்குநரிடம் ரூ.90.00 லட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று தாயாரம்மாள்
வாய்க்கால் சீரமைக்கப்பட்டதாகவும், இப்பணியின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்ய
17.02.2013 அன்று வருகை புரிந்த அப்போதைய பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் நிதி
நலிவடைந்த இப்பேரூராட்சியின் வருமானத்தை பெருக்க மேற்படி வாய்க்கால் மீது வணிக
வளாகங்கள் கட்ட அறிவுரைகள் வழங்கியதைத் தொடர்ந்து முதற்கட்டமாக மேற்கு பாண்டி
சாலையில் அமைந்துள்ள தாயாரம்மாள் வாய்க்காலின் மேல் பேரூராட்சி பொது நிதியின் கீழ் 39
எண்ணிக்கை வணிக வளாக கடைகள் கட்ட கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி
இயக்குநரின் உத்திரவு வாயிலாக நிர்வாக அனுமதி பெற்று வணிக வளாக கடைகள் கட்டி
முடிக்கப்பட்டு 24.10.2014ல் ஏலம் விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏலத்தில்
மொத்தம் 228 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்த ஏலம் கோரிய 39 நபர்களுக்குகடைகள்
குத்தகைக்கு விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக கிழக்கு பாண்டி சாலையில் அமைந்துள்ள
தயாராம்மாள் வாய்க்காலின் மீது பேரூராட்சியின் பொது நிதியின் மூலம் 39 வணிக வளாக
கடைகள் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக நிர்வாக அனுமதி
பெற்று கட்டி முடிக்கப்பட்டு 04.02.2016ல் ஏலம் விடப்பட்டதாகவும் இந்த ஏலத்தில் மொத்தம்
407 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்த ஏலம் கோரிய 39 நபர்களுக்கு கடைகள் குத்தகைக்கு
விடப்பட்டதாகவும் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில்
தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாணை (நிலை) எண் 92/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
நாள்.03.07.2007ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அசையா சொத்துக்கள் யாவும்
பொது ஏலத்தின் வாயிலாக குத்தகை விடப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி
பொது ஏலம் விடப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர்
தெரிவித்துள்ளார்.

மேலும் கடலூர் சாலை வணிக வளாகம் 9 கடைகள், மேற்கு பாண்டி சாலை வணிக
வளாக கடைகள் 39, மற்றும் கிழக்கு பாண்டி சாலை வணிக வளாக கடைகள் 39, ஆக
மொத்தம் 87 கடைகளும் ஒவ்வொரு கட்டத்திலும் ஏலம் விடும் போதும் முறையாக பேரூராட்சி
மன்றத்தின் முன் வைத்து தீர்மானம் இயற்றிய பின்னர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பு தினசரிகளில்
விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிக்கு சொந்தமான கடைகளை ஏலம் விடுவது தொடர்பாக வளவனூர்
பகுதியில் அனைத்து பகுதிகளிலும் உரிய விளம்பரங்கள் செய்யப்பட்டும், ஏல அறிவிப்பிற்கு
முந்தைய நாள் வரை டாம்-டாம் மூலமும் பேரூராட்சி பகுதியில் உள்ள வணிகர்களுக்கு
அறிவிப்பு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில்
தெரிவித்துள்ளார்.

மேலும் கடைகள் வாடகை விடுவது சம்பந்தமாக விழுப்புரம் பொதுப்பணித்துறை (கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு) செயற்பொறியாளர் அவர்களிடம் வாடகை மதிப்பும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏலத்தில் பங்கு பெற டேவணித் தொகையுடன் தொடர்புடைய ஆவணங்கள் சமர்ப்பித்த அனைவரின் விண்ணப்பங்களுக்கும் உரிய ஒப்புதல் வழங்கப்பட்டு ஏலத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஏலம் நடைபெறுவதை பார்வையிட கடலூர் மண்டல பேரூராட்சிகளின்உதவி இயக்குநரின் கடித எண் 795/2012/பேரூ.3/நாள் 03.02.2016ன் மூலம், தியாகதுருகம் பேரூராட்சி மற்றும் திருவெண்ணெய் நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர்கள் முறையே திரு ,ஆ.செந்தில்குமார் மற்றும் திரு S. ஆறுமுகம் ஆகியோர்களை பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டதாகவும் மேற்படி இரு பேரூராட்சி செயல் அலுவலர்களும் மேற்படி 04.02.2016ல் நடைபெற்ற ஏலத்தினை பார்வையிட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் நடைமுறையில் உள்ள அரசாணையின்படியும் உயர் அதிகாரிகளின் அறிவுரையின்படியும் ஏலம் விடப்பட்டுள்ளதாகவும் மேலும் வணிக வளாக கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளது தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.No. 4588/2016 மற்றும் W.P.No.5699/2016 யாவும் தள்ளுபடி செய்யப்பட்டு நிர்வாகத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் வளவனூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் புகார் கடிதத்தில் தெரிவித்துள்ளதுபோல் தாயாரம்மாள் வாய்க்காலை மூடிவிட்டு கடைகள் கட்டப்படவில்லை எனவும், மாறாக ஏற்கனவே பாதி தூர்ந்து போய், செடி கொடிகள் வளர்ந்து புதராக இருந்ததை சீர் செய்து வாய்க்கால் அமைத்து பேரூராட்சிகளின் இயக்குநரின் அறிவுரைகளின்பேரிலேயே வாய்க்கால் மேல் தூண்கள் அமைத்து அதன் பேரில் கடைகள் கட்டப்பட்டதாகவும் இதனால் வாய்க்காலில் மழை நீர் செல்ல எந்த தடையும் இல்லை எனவும், வாய்க்காலில் அடைப்பு ஏற்பட்டாலும் அதனை அகற்ற ஆங்காங்கே வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புகார்தாரர் 04.02.2016 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டதாகவும், இவர் குறைந்த தொகைக்கு ஏலம் கேட்டதால் இவர் கேட்ட கடை இவருக்கு கிடைக்கவில்லை எனவும், இந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் செயல் அலுவலர் மீது தொடர்ந்து புகார் தெரிவித்து வருவதாகவும் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. அ. தமிழ்வாணன், முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் .20.04.2017ல் ஆஜராகி தனது புகார் மனுவிற்கான விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவுசெய்துள்ளார்.

"..........03.01.2017ம் நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டதாகவும், 04.02.2016 அன்று நடைபெற்ற தாயாரம்மாள் வாய்க்காலில் கட்டப்பட்டுள்ள கடைகள் ஏலம் விட்டதில் பெறும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் 03.02.2016 அன்று மாலை 5.00

மணி வரை வரைவோலை வாங்கப்படும் என அறிவிப்பு கொடுத்துவிட்டு அதற்கு முன்னரே தனக்கு வேண்டியவர்களுக்கும், தனக்கு பணம் தருபவர்களுக்கும் கடைகளை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தான் 03.02.2016 அன்று ஏலம் கேட்க வரைவோலையுடன் சென்றதாகவும், வ.எண். 1 முதல் 33 எண் வரையிலான கடைகள் ஏலம் கிடையாது எனவும், 34 எண் முதல் 39 எண் வரையிலான 6 கடைகள் மட்டுமே ஏலம் என பேரூராட்சி செயல் அலுவலர் கூறியதாக தெரிவித்துள்ளார். எனவே எண் 1 முதல் 33 கடைகளுக்கு யாரும் ஏலம் கேட்டு பணம் கட்டவிடாமல் செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் செய்துள்ளதாகவும், 1 முதல் 33 வரையிலான கடைகளுக்கு லஞ்சப் பணம் கொடுத்தவர்களுக்கு அனுமதி சீட்டும், கடை எண் 34 முதல் 39 எண் உள்ள கடை மட்டுமே பொது ஏலம் நடத்தியதாகவும், 03.02.2016 அன்று 34 முதல் 39 கடைகள் வரை மட்டுமே பொது ஏலம் என கூறிவிட்டு 04.02.2016 அன்று கடை எண் 1 முதல் 33 வரை பொது ஏலம் போல தலா ஒவ்வொரு கடைக்கும் 2 நபர்கள் மட்டும் ஏலம் கேட்டதாகவும், 04.02.2016 அன்று ஏலத்தை தலைமை ஏற்று நடத்த வந்த பேரூராட்சி செயல் அலுவலர்கள் திரு.ஆ. செந்தில்குமார், மற்றும் திரு. S.ஆறுமுகம் ஆகியோர் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர், பெற்ற லஞ்ச பணத்தில் இருவரும் தொகை பெற்றுக் கொண்டு மேற்படி ஏல முறைகேட்டிற்கு ஆதரவு அளித்துள்ளதாகவும் 33 கடைகள் ஒதுக்கீடு செய்ததில் ரூ 1.00 கோடிக்கு மேல் பணம் பெற்றுள்ளதாகவும் ஒவ்வொரு கடைக்கும் 2 வரைவேலைகள் மட்டுமே பெறப்பட்டதாகவும் இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், மேலும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் வரைவோலை கொடுத்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து லஞ்ச ஒழிப்புத்துறைக்கு மனு செய்ததாகவும், அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்யுமாறு கூறியதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தான் 03.02.2016 அன்று கடைகள் ஏலம் கேட்பதற்காக தலா ஒரு லட்சம் மதிப்புள்ள 2 வரைவோலைகளை எடுத்துக் கொண்டு கடை எண் 5 மற்றும் 15 ஆம் எண்ணுள்ள கடைகளை ஏலம் எடுக்க போய் இருந்ததாகவும், பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சித் தலைவர், துணைத் தலைவர், செயல் அலுவலர் திரு. கணேசன் ஆகியோர் இருந்ததாகவும், தான் மேற்படி வரைவோலையினை பேரூராட்சித் தலைவர் திரு ஆர்.டி. முருகவேலிடம் கொடுத்ததாகவும், மேற்படி தலைவர் கடை எண் 1 முதல் 33 எண் உள்ள கடைகளுக்கு ஏலம் கிடையாது எனவும் எண் 34 முதல் 39 எண் உள்ள கடைகளுக்கு தேவையானால் வரைவோலை கொடுக்கலாம் என்ற கூறி மேற்படி வரைவோலையினை வாங்கி கொண்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் வரைவோலை பெற்றமைக்கான ஒப்புகை சீட்டு கொடுக்கவில்லை எனவும், அருகில் துணைத் தலைவர் திரு நாராயணன், மற்றும் செயல் அலுவலர் திரு.கணேசன் ஆகியோர் உடன் இருந்ததாகவும், தெரிவித்துள்ளார். மீண்டும் தான் பிற்பகல் 4.45 மணிக்கு தலைவரை சென்று பார்த்ததாகவும், அப்போது துணைத் தலைவரும் செயல் அலுவலரும் இல்லை எனவும், பேரூராட்சித் தலைவர் தன்னை அழைத்து சென்று தான் ஒப்பதல் தர இயலாது எனவும், எண் 34 முதல் 39 எண் கடை வரை ஏலம் எடுப்பதாக இருந்தால்

மட்டும் ஒப்புதல் தரப்படும் எனவும் தெரிவித்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்து மேற்படி உரையாடலை தனது கைப்பேசி மூலம் பதிவு செய்துள்ளதாகவும், அப்போது தனது தெருவில் உள்ள திரு. திருநாவுக்கரசு என்பவர் உடன் வந்ததாகவும் அவரும் ஏலம் கேட்க வந்தவர் எனவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி கடைகளை ரூ 2000/- முதல் ரூ.2100/- வரை வாடகைக்கு எடுத்து, உள் வாடகையாக ரூ 4000/- முதல் ரூ. 4500/- என வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் திரு தமிழ்வாணன் தெரிவித்துள்ளார்.

திரு நாகப்பன், திரு தமிழ்மாறன், ஆகியோர் ஒரே வரைவோலையாக கொண்டு வந்து மொத்தம் கடைகள் எண் 20 மற்றும் 24 ஐ பெற்றுக் கொண்டதாகவும், அதில் திரு. நாகப்பன் அளித்துள்ள முகவரி தவறானது எனவும் அவர் ரேவதியார் தெருவினை சேர்ந்தவர் எனவும் தவறாக அம்பேத்கர் பகுதி என குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கடைக்கும் ரூ 3.00 லட்சம் முதல் ரூ 7.00 லட்சம் வரை திரு முருகவேல் (தலைவர்) மற்றும் திரு கணேசன், செயல் அலுவலர் இருவரும் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தான் இது சம்பந்தமாக ஒரு CD சமர்ப்பித்துள்ளதாகவும் அதில் தன்னிடம் லஞ்சம் கேட்ட விவரம் இல்லை எனவும், ஆனால் மேற்படி தலைவர் தன்னை கவனிப்பதாகவும் தனக்கு பணம் கொடுப்பதாகவும் சொன்ன விவரம் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கடை எண் 34 முதல் 39 வரை ஏலம் எடுத்தவர்கள், கடை எண் 1 முதல் 33 வரை ஏலம் எடுத்தவிவரத்தினை சொல்வார்கள் எனவும், கடை எண் 1 முதல் 33 வரை முறையாக ஏலம் விடப்படவில்லை எனவும், இந்த விவரங்கள் அனைத்தையும் ஏலத்தில் கலந்து கொண்டு கடை கிடைக்காதவர்கள் சொல்வார்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

திருமதி செல்வி, க/பெ திரு இராதாகிருஷ்ணன், மேற்கு பாண்டி ரோடு, வளவனூர் என்ற முகவரியில் ஏலம் கேட்க வந்து கடைகள் கிடைக்காமல் சென்றவர்கள் எனவும் அடுத்து திரு சுகுமார் (வயது 35) என்பவரது முகவரி 15, பாவாடைசாமி தெரு, குமாரகுப்பம், வளவனூர் இவரும் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கிடைக்காமல் தோல்வியை சந்தித்தவர் என தனது வாக்குமூலத்தில் திரு.அ. தமிழ்வாணன், முறையீட்டு மனுதாரர் பதிவு செய்துள்ளார்.

திரு கா. சாரதி, த/பெ திரு காசிராஜன், டாக்டர் அம்பேத்கர் தெரு, வளவனூர் இம்முறைமன்ற நடுவத்தில் 20.04.2017ல் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".........20.01.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும் தான் வரைவோலை எடுக்கவில்லை எனவும், ஆனால் ஏலத்தில் கலந்து கொள்ள போகும் போது தடுத்துவிட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு.அ. தமிழ்வாணன் என்ற மனுதாரரும் தானும் பக்கத்து பக்கத்து தெருவில் குடியிருப்பதாகவும், தி.அ. தமிழ்வாணன் அளித்துள்ள வாக்குமூலங்கள் மற்றும் தனது கோரிக்கைகள் அனைத்தும் ஒத்ததே ஆகும்

எனவும் எனவே தான் குறிப்பாக சொல்லப்பட்டது தவிர மற்ற அனைத்தையும் அவர் வாக்குமூலத்தில் உள்ளது என தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் சாட்சியாக சேர்த்துள்ள திரு வி.திருநாவுக்கரசு, த/பெ திரு வேங்கையன், 222, டாக்டா அம்பேத்கர் தெரு, வளவனூர் இம்முறைமன்ற நடுவத்தில் 20.04.2017 நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கிழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........திரு.அ. தமிழ்வாணன், திரு.கா.சாரதி எல்லோரும் ஒரே பகுதியில் வசிப்பதாகவும், வளவனூர் பேரூராட்சியில் புதிய கடைகள் ஏலம் விட்டதில் நடந்த முறைகேடுகள் குறித்து திரு.தமிழ்வாணன், திரு சாரதி ஆகிய இருவர் முறையீட்டு மனு அனுப்பியது தனக்கும் தெரியும் எனவும், தான் ஆலைக்கு கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு மேற்பார்வை செய்வதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தான் எண் 1 உள்ள கடையினை ஏலம் எடுக்க சென்றதாகவும், தலா ரூ 1.00 லட்ச ரூபாய் அளவில் இரண்டு வரைவோலை எடுத்துச் சென்றதாகவும், அதில் ஒன்று தனது பெயரிலும் மற்றொன்று வேறொருவர் பெயரிலும் எடுத்துச் சென்றதாக தெரிவித்துள்ளார். தான் சென்ற சமயத்தில் பேரூராட்சித் தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் இருந்ததாகவும், தன்னை பார்த்தவுடன் பேரூராட்சி தலைவர் மற்றும் அவரின் ஆட்கள் தன்னை வழி மறித்து 1–ம் எண்ணுள்ள கடை உங்களுக்கு கிடையாது எனவும், கடை எண் 35க்கு மேல் உள்ள கடைகளை எடுத்துக் கொள்ளலாம் என சொன்னதாகவும், அதற்கு தான் 1–ம் எண்ணிட்ட கடை ஏன் கொடுக்கவில்லை என கேட்டதாகவும், அதற்கு அனைவருக்கும் விவரம் சொல்லியாகிவிட்டது அந்த கடைகள் எல்லாம் ஏலம் போய்விட்டது எனவும், 35வது கடைக்கு மேல் எந்த கடையினை வேண்டுமானலும் எடுத்துக் கொள்ளலாம் என தெரிவித்ததாகவும், 36 ம் எண்ணிலிருந்து அமையப்பட்டுள்ள கடைகள் அவ்வாளவு சிறப்பாக இருக்காது என்பதால் தான் வேண்டாம் என சொல்லிவிட்டு வரைவோலையினை யாரிடமும் கொடுக்கவில்லை எனவும், கடை எண் 1ல் இருந்து முக்கால்வாசி கடைகள் எல்லாம் லஞ்சத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளதாக தனது வாக்குமூலத்தில் சாட்சி திரு சாரதி பதிவு செய்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 05.05.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் செயல் அலுவலர்அளவிலான இரு ஏல பார்வையாளர்கள் தங்களது வாக்குமூலத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 15.06.2017ல் ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது.

திரு ஆ. செந்தில் குமார், செயல் அலுவலர் (பொ) வளவனூர் இம்முறைமன்ற நடுவத்தில் 15.06.2017ல் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் தற்போது கோட்டகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலராக பணி புரிவதாகவும், வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலராக 15.09.2016 முதல் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். திரு.அ. தமிழ்வணன், புகார் மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும், தன்னால் இது குறித்து ஏற்கனவே 22.02.2016 ல் அறிக்கை

சமர்ப்பித்துள்ளதாகவும் அதில் விவரமாக குறிப்பிட்டுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது குறித்து சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.4588 மற்றும் W.P.No. 5699/2016 ஆக இரண்டு வழக்குகள் தொடரப்பட்டு இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் திரு.அ. தமிழ்வாணன் இந்த ஏலத்தில் கலந்து கொண்டதாகவும், அவர் குறைவான தொகைக்கு ஏலம் கோரியதால் அவருக்கு ஏலம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். W.P.No. 5699 ல் திரு. அ. தமிழ்வாணன் மனுதாரராக உள்ளார் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

கடைகள் ஏலம் விடப்படும்போது தான் பேரூராட்சி செயல் அலுவலராக பொறுப்பில் இல்லை எனவும், ஏலம் நடக்கும்போது தான் தியாகதுருகம் பேரூராட்சியின் செயல் அலுவலராக இருந்ததாகவும், ஏலம் நடக்கின்ற நிகழ்வுகளை பார்ப்பதற்கு பார்வையாளராக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தன்னை பணித்திருந்ததாகவும், ஏலம் நடக்கும்போது தான் அங்கு இருந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பில் முறையாக ஏலம் நடைபெற்றது எனவும் இது குறித்து கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்ததாகவும் தான் இது குறித்து நோடியாக எழுத்து பூர்வமான வாக்குமூலத்தினை இணைத்து சமர்ப்பிப்பதாக தெரிவித்து மேற்படி ஏலம் நடக்கும்போது தங்களிடம் மனுதாரரோ மற்றவர்களோ முறைகேடு நடந்ததாக புகார் ஏதும் தெரிவிக்கவில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திருவெண்ணெய் நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரும், வளவனூர் பேரூராட்சி வணிக வளாக கடைகள் ஏல பார்வையாளருமான திரு S. ஆறுமுகம், 15.06.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"…….தான் திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், வழக்கில் உள்ள வளவனூர் பேரூராட்சியில் வணிக வளாக கடைகள் ஏலம் நடைபெறும்போது 04.02.2016 அன்று அந்த பணிகளை பார்வையிட மாற்றுப் பணியில் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருடைய ஆணைப்படி அந்த பணிகளை பார்வையிட்டதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி உதவி இயக்குநர் 03.02.2016ம் நாளிட்ட ஆணையில் தனி நபர் குறுக்கீடு ஏதும் ஏலத்தின் போது இருந்தால் காவல் துறையில் புகார் செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தான் 04.02.2016 அன்று ஏலம் நடந்தபோது முழுநாளும் இருந்ததாகவும் ஏலம் முறையாக நடந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனி நபர் குறுக்கீடு ஏதும் இல்லாததால் பிரச்சினைகள் ஏதும் இல்லை என தொலைபேசி மூலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவல் தெரிவித்ததாகவும் மேலும் இது குறித்த எழுத்து பூர்வமான வாக்குமூலத்தையும் இணைத்து சமர்ப்பித்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

வளவனூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும் தற்போதைய திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி செயல் அலுவலர் திரு S.T. கணேசன், இம்முறைமன்ற நடுவத்தில் 15.06.2017ல் ஆஜரகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".......தான் வளவனூர் பேரூராட்சியில் 08.10.2015 முதல் 05.02.2016 வரை செயல் அலுவலராக இருந்ததாகவும், தற்போது திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். வழக்கில் உள்ள வளவனூர் பேரூராட்சியில் வணிக வளாக கடைகள் எலம் நடத்தும்போது தான் செயல் அலுவலராக இருந்ததாகவும், மனுதாரர் திரு.அ. தமிழ்வாணன் என்பவரின் மனு குறித்த விவரம் தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். தான் செயல் அலுவலராக இருந்த போது கடை ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் கொடுத்த வரைவோலைகளை பெற்றுக் கொண்டதாகவும், அதில் உறவு முறைகளை சேர்ந்தவர்கள் இருந்தார்களா என்ற விவரம் தனக்கு தெரியாது எனவும், உறவு முறையில் இருப்பவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்ற விதிகள் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு சாரதி ஏலத்தில் கலந்து கொண்டாரா என்ற விவரம் தனக்கு தெரியாது எனவும், திரு தமிழ்வாணன் எந்த கடைக்கு ஏலம் கேட்டார் என்ற விவரம் தனக்கு தெரியாது எனவும் ஏலம் நடக்கும்போது முறைகேடு நடந்ததாக ஒருவரும் தெரிவிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். காவல்துறை ஆய்வாளர் தலைமையில் 10 காவலர்கள் முன்னிலையில் ஏலம் நடந்தததகவும் விதிகளின்படி ஒவ்வொரு கடையாக ஏலம் விடப்பட்டது எனவும் முறைகேடு ஒன்றும் நடக்கவில்லை எனவும் வரைவோலை கொடுப்பவர்கள் யாரையும் தான் தடுக்கவில்லை என தனது வாக்குமூலத்தில் முன்னாள் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 18.01.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பாக கூடுதல் விவரங்களை அறியும் பொருட்டு முறையீட்டு மனுதாரர்களான திரு.அ.தமிழ்வாணன், திரு சாரதி , திரு வி.திருநாவுக்கரசு, சாட்சி, மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்,வளவனூர் ஆகியோர்களை இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018 அன்று நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கக் கோரி ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட ஆணையின்படி வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தவிர ஏனையோர் எவரும் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை அதற்கான எந்தவிதமான விளக்கமும் அளிக்கவில்லை.

24.01.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு ஆ. செந்தில்குமார் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".....திரு அ. தமிழ்வாணன், மற்றும் திரு கா. சாரதி அவர்களின் மனுக்கள் பற்றிய விவரம் தனக்கு தெரியும் எனவும், தான் கோட்டகுப்பம் பேரூராட்சியின் செயல் அலுவலராகவும், வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் (கூடுதல் பொறுப்பு) ஆக

உள்ளதாகவும் கோரிய விவரங்களை தான் ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 32/2017/அ.1/ நாள் 29.01.2018ன் மூலம் 24.01.2018 அன்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்த அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அதில் வளவனூர் பேரூராட்சி வணிக வளாக கடைகள் ஏலம் விடப்பட்டது குறித்து மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் ஏற்கனவே திருவாளர்கள் வி.திருநாவுக்கரசு மற்றும் திரு அ. தமிழ்வாணன் ஆகியோரால் தொடரப்பட்ட வழக்கு எண்கள் முறையே W.P.No. 4588/2016 மற்றும் W.P.No.5699/2016 தொடரப்பட்டு அவை யாவும் தள்ளுபடி செய்யப்பட்டு நிர்வாகத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர் எவரும் மேல் முறையீடு செய்யவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையிட்டு மனுதாரர் தனது மனுவில் வளவனூர் பேரூராட்சியில் வணிக வளாகங்கள் ஏலம் விடப்பட்டது தொடர்பாக தெரிவித்துள்ள புகார் மனுவிலோ அல்லது தங்களது வாக்குமூலங்களிலோ தாங்கள் இது சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததாகவோ, அவ்வழக்கு தீர்ப்பு வரப்பெற்றது குறித்தோ தெரிவிக்கவில்லை. இது சம்பந்தமாக விவரங்கள் அறிய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக கோரியும் ஆஜராகாமல் இருந்துள்ளனர். மேலும் இந்த ஏல நிகழ்வில் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் பார்வையாளராக பணியமர்த்தப்பட்ட தியாகதுருகம் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மேற்படி ஏலம் முறையாக நடந்ததாகவும் இது குறித்த புகார் எதுவும் மேற்படி ஏல நாளில் தங்களிடம் எவரும் தெரிவிக்கவில்லை எனவும் தங்கள் வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளதோடு மேற்படி ஏலம் நடைபெற்ற விவரத்தினை தொலைபேசி வாயிலாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கும் அன்றைய தினமே தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் திரு.அ.தமிழ்வாணன், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண் W.P.No. 5699/2016 ல் **15.03.2016**ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் " Factual averments which have been setout in the preceding paragraphs would clearly show that the petitioner never applield for Shops Nos 5 & 15 and in respect of Shop Nos. 35 & 36 though he applied, did not participate and offer any amount in the matter. In the light of the above, the Writ petition ;is misconceived and the same is dismissed . Interium order already granted is vacated. No Costs. Consequently connected Miiscellaneous Petitions are closed, என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் திரு வி.திருநாவுக்கரசு என்பவர் மாண்மை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை வழக்கு எண் W.P.No.4588/2016 ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் " From a Perusal of the materials available on record. I find that the tender process was over and the tenders were confirmed in favour of the successful bidders as early as on04.02.2016 itself. More over the Pachayat has also passed a resolution on 05.02.2016 confiring the auction dated 04.02.2016 and the successful bidders have also paid the rental amout to the Panchayat. Now nothing survives in the

prayer sought for by the Petitioner in the present Writ Petition. Hence the Writ Petition is liable to be dismissed.

Accordingly the Writ Petition is dismissed. Consequently conneceted Misscellaneous petitions are closed – No costs. என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாலும், இந்நிகழ்வில் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ள அறிக்கையினை ஏற்றும், மனுதாரர்கள் மேற்படி வணிக வளாக கடைகள் ஏலம் விடுதல் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தும் அவ்வழக்கு நிர்வாகத்திற்கு சாதமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், முறையீட்டு மனுதாரர்கள் தங்கள் மனுவிலோ வாக்கமூலங்களிலோ இது சம்பந்தமாக எந்த கருத்தினையும் தெரிவிக்காததை கருத்தில் கொண்டும் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 –ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

செயலாளர். 24/4/18

24/4/18

பெறுநர்

1.திரு அ. தமிழ்வாணன்,
த/பெ திரு அர்ச்சுனன்,
103, டாக்டர் அம்பேத்கர் தெரு,
வளவனூர்,
விழுப்புரம் மாவட்டம்.

2.திரு. கா. சாரதி
த/பெ திரு காசிராஜன்,
26, டாக்டர் அம்பேத்கர் தெரு,
வளவனூர் மற்றும் அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம்

3.செயல் அலுவலர்,
வளவனூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்,

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர்.